

சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 17 குடிசைகள் மாறி உயர்வாகும்! இலட்சிய கலைஞர் புகழ் ஓங்கும்! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்டம் வெ.பரிமளம் எம்.சி. தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் ஆகியோர் நல உதவிகள் வழங்கினர். உடன் பகுதி செயலாளர்கள் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி மற்றும் இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.மகாதேவன், பி.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்.ஆசாத், என்.பி.எம்.சேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எல்.நவீன், ராஜேஷ்ஜெயின் எம்.சி முன்னிலை வகித்தனர். ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.பெ.ஜெயராமன், மே.ஜனார்தனம், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார் வட்ட செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் முருகன் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்


### சிவகங்கை மாவட்ட செயற்குழுக் கூட்டம்! கழகத்தில் உள்ள அனைத்து அணிகளும்

# ஒன்றுபட்டு பணியாற்றினால் தேர்தலில் 100% வெற்றியை பெறலாம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூன் 23-

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன முன்னிலையில் நடைபெற்றது .மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார். இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ. சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர்ராஜ் ,முன்னாள் எம்.எல்.ஏ .கே .முருக வேல் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம் ஆகியோர் பேசினார்கள். இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது,



நம்முடைய மாவட்டத்தில் இம்மாதம் 17ஆம் தேதி துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தார். அரசு நிகழ்ச்சிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளை சந்தித்து பேசினார்.

இந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைந்தது. துணை முதலமைச்சர் மகிழ்ச்சியுடன் வந்தார் மிகுந்த மகிழ்ச்சியுடன் திரும்பி சென்றார். அதற்காக அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டினை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கழக தலைவர் முதல்வர் ,துணை முதல்வர் ஆலோசனையின் படி நாம் ஒன்றுபட்டு அனைத்து அணிகளும் தேர்தல் பணியாற்றினால் 100 சதவீதம் வெற்றி பெற முடியும் . தலைமைக் கழகம் இடும் கட்டளையை நாம் உடனடியாக நிறைவேற்றி அதை செயல்படுத்திட வேண்டும் .தேர்தல் பணி காலங்களில் தகவல் தொழில்நுட்ப அணியின் பங்கு சிறப்பானதாக அமைந்துள்ளது. அந்தப் பணி சிறப்பாக அமைந்திட அவர்களுக்கு நாம் உறுதுணையாக செயல்பட வேண்டும். இந்தியாவிலேயே. உள் ள அரசியல் கட்சிகளில் தமிழகத்தில் தான் கழகம் முழுமையான அளவு மக்கள் பணி ஆற்றுகின்றது. வேறு ஒரு எந்த இயக்கமும் இத்தகைய பணியாற்ற வில்லை. நாம். அவ்வாறு பணியாற்றுவதால் மக்கள் பலன் அடைகிறார்கள்.ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைய வேண்டும். இரண்டாம் முறையாக நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக வர வேண்டும். இதை நாம் சபதமாக எடுத்து தேர்தல் பணியாற்ற வேண்டும் .வருகிற 23 24 25 ஆகிய தேதிகளில் இளைஞர் அணி சார்பில் இளம் சொற்பொழிவாளர் கள் பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது .அதை நாம் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் .புதிதாக உறுப்பினர்கள் சேர்க்குமாறு கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதில் 30 சதவீதம் புதிய உறுப்பினராக இருக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள் .நாம் அந்தந்த பகுதியில் உறுப்பினர் சேர்க்கும் பொழுது கழக அரசின் நாலரை ஆண்டு சாதனைகளை மக்களிடம் விளக்கி கூறி கழகக் கொடியினை ஏந்தி திண்ணை பிரச்சாரமாக மேற்கொண்டு நாம் உறுப்பினர் சேர்த்திட வேண்டும் .கழக தலைவர் தளபதி அவர்கள் விரும்பிய 200 தொகுதிகளுக்கு மேலாக நாம் வெற்றி பெற பாடுபட வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளில் முழுஅளவு வெற்றி பெற்று 100% வெற்றி யினை தளபதி அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மொழி ,இனம், கலாச்சாரம், ஆகியவைகள் பாதுகாக்கப்படுவது கழகத்தினால் தான் .அத்தகைய மொழி,இனம் கலாச்சாரம் பாதுகாப்பு தொடர வேண்டுமென்றால் நம்முடைய கழ க ஆட்சி அமைய வேண்டும் .நமது உறுப்பினர் பணியை ஒன்றரை மாதத்திற்குள் குறிப்பிட்ட காலத்தில் சேர்க்க வேண்டும்.

30% புதிய உறுப்பினர் சேர்த்திட வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிபெற முடியும் . இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அமைச்சர். கே.ஆர். பெரியகருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் க.சண்முகம் ,கே. ஆர்.என். என். போஸ் மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ முன்னாள் எம்.எல். ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, செயற்குழு உறுப்பினர் மாநகர மேயர் எஸ். முத்துதுரை, நகர்கழக செயலாளர் கள் சி .எம். துரை. ஆனந்த், பெரி .பாலா , க .பொன்னுச்சாமி பொதுக்குழு உறுப்பினர்கள் கரு. அசோகன், பள்ளத்தூர் கே. எஸ் .ரவி, பி .ஆர், பெருமாள்,பி.டி.ஆர்.முத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் சுப. சின்னத்துரை, கே. எஸ். ஆனந்த், குன்னக்குடி சுப்பிரமணியன் , நா.நெடுஞ்செழியன் , எஸ் .சண்முக வடிவேல் ,விராமதி மாணிக்கம் பூமணி கே .பாலசுப்பிரமணியன்,பி. சேல்வராஜ், திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், பெ .மந்த காளை, துரை.ராஜாமணி, மா .அண்ணாதுரை, அ.முத்துச்சாமி, ,ஆறு. செல்வராஜன், வே. தமிழ்மாறன் ,கா. வெங்கட்ராமன், ஆர்.எம்.கென்னடி, வே . ஆரோக்கியசாமி, யோக .கிருஷ்ணகுமார் , நாகனி ரவி, பூபால சிங்கம்,லெ.மு. ரவிச்சந்திரன்,திருமதி வசந்தி சேங்கை மாறன் ,கடம்பசாமி,பேரூர் கழக செயலாளர் கள் ஆர். கார்த்திகேயன், பி.கதிர்வேல், ,ஜெயராமன், நாகூர் கனி, பி.ஏ..நஜ்மதீன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், துணை அமைப்பாளர்கள் பரணிக்கிட்டு , மகாதீர், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேம லதா செந்தில், நிர்வாகிகள் மார்க் ரெட்கமலா,திலகவதி கண்ணன் தெரசா மாவட்ட ஆதி திராவிட நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன், நிர்வாகிகள் சன் சுப்பையா, சேவியர் அண்ணாமலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காரைக்குடி மாநகரச் செயலாளர் நா. குணசேகரன் நன்றி கூறினார்.

# 37வது வட்டத்தில் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச்செயலாளர் கே.இ.செந்தமிழ் அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன்.23-

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்கு பகுதி. 37வது வட்டத்தில் பாக முகவர்கள்- பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (23.06.2025 - திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் முல்லை நகர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள எம்.எஸ்.மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கே.இ.செந்தமிழ் அரசு வட்டச் செயலாளர் தலைமை வகிக்கிறார்.

பகுதிச்செயலாளர் அ.முருகன் முன்னிலை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, பெரம்பூர் தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட பகுதி, வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பி.எல்.ஏ.2, பி.எல்.சி, பி.டி.ஏ. உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று வட்டக் கழகச் செயலாளர் கே.இ.செந்தமிழ் அரசு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் நல்லூர் ஊராட்சிகுட்பட்ட டாக்டர் வரபிரசாத் ராவ் நகரில் உள்ள அன்னை மஹாலில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் ஆலோசனைபடி, சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் மாபெரும் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம் நடைப்பெற்றது. இம்முகாமினை சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பூதூர் ப.சேகர், மு.சீனிவாசன், நா.பரசுராமன், துளசி ராஜேந்திரன், ஆர்.சி.சிவசங்கரன, அலமாதி ஆர்.ரூபேஷ், மாணவரணி க.பிரபு, நெ.தமிழரசன், கார்த்திக்ராஜா, ஜீவா, நித்திஷ், ஹரிஷ், விக்கி, பிரகாஷ், ஹரி, லோகேஷ், கவின், சூர்யா, சத்யா, முகேஷ், தமிம் அன்ஹாரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் என்.என். கண்டிகை ஊராட்சியில் தெருமுனை கூட்டம் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய பொறுப்பாளர் ஏ.எல். விஜயகுமார், ஏற்பாட்டில் மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ம.கிரண், முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் சிவாஜிகிருஷ்ணமூர்த்தி, கா.ராஜேஸ்வரி, ஆகியோர் ஒன்றிய நகர கழக செயலாளர்கள் கூளூர் எம்.ராஜேந்திரன், வி.வினோத்குமார், சி.ஜே சீனிவாசன், டி. மோதிலால், சதீஷ்குமார், கார்த்திக், திலீப், ராஜேஷ், முரசொலி மூர்த்தி, கமலநாதன், யுவராஜ், ஏழுமலை, குப்பன், அர்ச்சுனன்,ரவி, முரளி, அன்பு, கோபி, சக்கரவர்த்தி, சத்யா, உள்பட கழக நிர்வாகிகள் இளைஞரணி அணி நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்



சென்னை வடக்கு கிழக்கு மாவட்டம் புழல் ஒன்றியம் கிராண்ட்லைன் ஊராட்சியில் முத்தமிழறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் நிகழ்ச்சி பி. மோகன் அவர்கள் ஏற்பாட்டில் புழல் ஒன்றிய கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் மாதாவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ அவர்கள் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.அண்ணாதுரை,ஆர். முருகன்,ஜே.முருகன்,மு.ரமேஷ்,சி. ஏழுமலை, மா.மணி, பிரேமலதா, தமிழ்ச்செல்வி, கிளை கழக செயலாளர்கள் உதயகுமார், மனோகரன், வி.என்.வெங்கடேசன், நேதாஜி, சுபேந்திரன், சாக்ரடீஸ், முருகன், பி.கார்த்திக் எம். செல்வகுமார், கமலக்கண்ணன், பாஸ்கர், அருண், அருள், மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஆர். டி. சேகர் எம்.எல்.ஏ., கன்னிகை கோ.ஸ்டாலின் ஆலோசனை!

# பெரம்பூர் 37, 37 'அ' வட்டங்களில் பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதி செயலாளர் அ.முருகன் அறிக்கை!

சென்னை,ஜூன்.23-

பகுதி செயலாளர் அ. முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 37 மற்றும் 37 அ வட்டங்களில் அடங்கியுள்ள பாகங்கள் வாரியாக BLA2 மற்றும் BLC BDA உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்ட விவரம் படி நடைபெறுகிறது.

**37 வது வட்டம்**

நாள் : 23 6 2025 மாலை 5 மணி, இடம்: எம்.எஸ். திருமண மண்டபம், முல்லை நகர் பேருந்து நிலையம் அருகில், தலைமை: வட்டச் செயலாளர் கே.இ. செந்தமிழ் அரசு, முன்னிலை: பகுதி செயலாளர் அ.முருகன் ,

**37 வது அ வட்டம்**

நாள் 23 6 2025 மாலை 6:00 மணி, இடம் ஜே ஆர் கே திருமண மஹால் மீனாம்பாள் சாலை, தலைமை: வட்ட செயலாளர் சி.எஸ். ரவி, முன்னிலை: பகுதி செயலாளர் அ.முருகன்

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்எல்ஏ தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் அவர்களது கைபேசி எண்களை சரி பார்த்து தேர்தல் பணி குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார்கள்

ஆகவே வட்ட செயலாளர்கள் அவரவர் பாகங்கள் உட்பட்ட BLA2 மற்றும் BLC, BDA பூத்கமிட்டி உறுப்பினர்கள் அனைவரையும் பாகம் வாரியாக அமர செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில மாவட்ட பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் வட்ட நிர்வாகிகள் அணிகளின் துணை அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில்

# திருத்துறைப்பூண்டியில் செம்மொழிநாள் கூட்டம்: எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் சிறப்புரை!

## பூண்டி.கே.கலைவாணன்- ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

திருவாரூர், ஜூன் 23.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் செம்மொழி நாள் சிறப்புபொதுக்கூட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையில் நடைபெற்றது.தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ். விஜயன், தட்கோ தலைவர் நா.இளையராஜா உள்ளிட்டோர் முன்னிலை ஏற்று உரையாற்றினார்.

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியின் செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமை ஏற்றார். நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ்.விஜயன், தட்கோ தலைவர் நா. இளையராஜா,மாவட்ட துணை செயலாளர்கள் எம்.கார்த்திக்,தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன் ,ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல்,வி.எஸ். ஆர்.தேவதாஸ், இரா. மனோகரன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் இராஜேந்திரன், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிக்கந்தர், முன்னாள் கூட்டுறவு சங்க ஆர். எஸ்.சுந்தர்,நகர்மன்ற முன்னாள் தலைவர் ஆர்.மணி மாறன்,இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.வினோத்குமார்,எம்.பி.எடிசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திரைப்பட நடிகர் தலைமை கழக பேச்சாளர் எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் சௌமியன் வைத்யநாதன்,மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு பங்கேற்று சிறப்புரை யாற்றினார் .

கூட்டத்தில் மாவட்ட ,ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். நகர இளைஞர் அணி அமைப்பாளர் கோ.வசந்த் என்கிற முருகவேல் நன்றி கூறினார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்சுதர்சனம் ஆலோசனையின் படி கே.பி.சங்கர் எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்படி திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் 6வது வட்ட கழக செயலாளர் கே.கண்ணன் அவர்கள் வரவேற்பில் திருவொற்றியூர் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஸ்ரீசரவணன் ஏற்பாட்டில் கலைஞர் நகரில் உள்ள சன் உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாபெரும் பூப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற இரண்டு அணிகளுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் கோப்பைகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி பாராட்டினார். இதில் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.